ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகை.

| தொகுதி 16 | ஜய - ஆடி | பகுதி 7 |
| --- | --- | --- |
| Vol. 16 | July 1954. | No. 7 |


பக்கம்


இரு ரத்நங்களின் நஷ்டம் ... 3

ஔஷதகுணம்—2

கஸ்தூரி பைரவவடி ... 5

ப்ருஹத்கஸ்தூரி பைரவ வடி ... 8

பாலசிகித்ஸா—ஆரோக்ய கல்பத்ருமம் ... 9

செய்திகள் ... 12

அரசாங்கம் ஆதரித்திருந்தால்... ... 16

அப்யுதய கேந்த்ரங்கள் ... 18

ஆரோக்யாம்ருதம்—2

நல்வாழ்வு—2 (தனி) 1—4


## தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

மண்டல சம்பந்தமான எல்லாவித காரியங்களுக்கும் தலைவருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.


தலைவர் T. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ M. A., L. I. M.

23. சிங்காரிநாயக்கன் தெரு, மந்தை வெளி, மைலாப்பூர்

மதராஸ்.—4.


சந்தா அனுப்பவும், மற்ற நிர்வாஹ விஷயங்களுக்கும் விலாஸம்:

பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்:

27, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,

திருச்சினுப்பள்ளி.

பண்டிட் ஸ்ரீ. S. M. ஸுந்தரராஜாசார்யர்,

ஆசிரியர்—"வைத்ய சந்த்ரிகா" ஸ்ரீரங்கம்.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுத வேண்டும்.



आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादिथं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

# இரு ரத்நங்களின் நஷ்டம்

அகில பாரத வித்யா பீடத்தின் தலைவரும், ஸமீபத்தில் நடந்த கோட்டக்கல் வித்யாபீட மஹாநாட்டின் தலைவரும், ராஜஸ்தான ராஜ்ய ஆயுர்வேத இலாகா டைரெக்டரும், ஆயுர்வேத காலேஜ் ப்ரின்ஸிபாலும், ப்ரபல ஸம்ஸ்க்ருத வித்வானும், ப்ரஸித்த வைத்யரும், மான்யவர லக்ஷ்மீராம் ஸ்வாமிகள் சிஷ்யருமான ஸ்ரீ நந்த கிசோரசர்மா அவர்கள் ஜயபூரிலும், கார் மெடிகல் காலேஜின் பாதாலஜிப்ரொபஸரும், ப்ரபல ஆங்கில வைத்யராயிருந்த போதிலும் ஆயுர்வேதத்தில் சிறந்த அபிமானத்துடன் குருமுகமாக அப்யஸித்து ஆயுர்வேதத்தில் தேர்ச்சி அடைந்து ஹ்ருதயம், நாடி, சாரீரம்—இவ்விஷயங்களில் விசேஷ ஆராய்ச்சிகளுடன் ஆயுர்வேதரீதியாக க்ரந்தமெழுதியவரும், பரீக்ஷகருமான ஸ்ரீ. B. N. பானர்ஜி அவர்கள் கல்கத்தாவிலும், ஸமீபத்தில் காலமான செய்தியை மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். இருவரும் ஒப்பற்ற ஸேவையை ஆயுர்வேதத்திற்குச் செய்த மஹான்கள். இவர்களுடைய நஷ்டம் ஆயுர்வேத உலகத்துக்கு ஈடுசெய்ய முடியாததாகும். மனுஷ்ய சக்திக்கு மீறிய செயல் என்பதால் ஒருவாறு மனம் தேறி, அன்னார்களுடைய ஆத்மா சாந்தி அடையுமாறு தன்வந்தரி பகவானை ப்ரார்த்திப்போமாக.

प्रचारः संघशक्तिश्च सिद्धेः परमसाधनम् ॥

ப்ரசாரமும் ஸங்கசக்தியும் கார்ய ஸித்திக்கு உயர்ந்த ஸாதனங்களாகும். பொது ஜனங்கள் மத்தியில் ஆயுர்வேதத்தின் விசேஷத்தை பிரசாரம் செய்ய உத்தம ஸாதனமான **வைத்ய சந்த்ரிகைக்குத்** தங்களுடைய 'நண்பர்களையும் சந்தாதாரர்களாக்குங்கள் !

வைத்யர்களை மண்டலத்துக்கு அங்கத்தினர்களாக்குங்கள் !!

மண்டல வருஷச் சந்தாவை இதுவரை அனுப்பாதவர்கள் தயவு செய்து சீக்ரத்தில் அனுப்புங்கள் !!!

இதனுல் கிடைக்கும் எல்லா நன்மைகளையும் அடையுங்கள்.

---


## ஸ்ரீரங்கம் ஸ்ரீ லக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத தர்மவைத்யசாலே, ஸ்ரீரங்கம்.

ஷை வைத்யசாலேயில் தினந்தோறும் காலே மணி 8-முதல் 10 வரையிலும் மாலே மணி 4-முதல் 5 வரையிலும் நோயாளிகளை நன்கு பரிசோதித்து சிறந்த ஆயுர்வேத மருந்துகள் இலவசமாக அளிக்கப்படுகிறது.

சென்ற மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 1891 | 4799 |
| பெண்கள் | 1686 | |
| சிறுவர் | 1222 | |

நிர்வாஹஸ்தர்,

M. V. கிருஷ்ணமூர்த்தி,

B. A. B. L. அட்வகேட்,

ராயபாளேயம் எஸ்டேட்.



## பாரத ஆயுர்வேத சாலா

27. சின்னக்கடைத் தெரு, :: தெப்பக்குளம், திருச்சி.

எல்லாவித சாஸ்திரீயமான

— ஆயுர்வேத மருந்துகள் —

**மிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்டவை.**

**வைத்யர்களுக்கு விசேஷ சலுகை உண்டு.**

**விபரத்திற்கு எழுதவும்.**

ஔஷத குணம்:

# கஸ்தூரி பைரவ வட.

பைஷஜ்ய ரத்னாவளி, ரஸராஜஸுந்தரம், தன்வந்தரி, ரஸேந்திர ஸாரஸங்கிரஹம் இந்நூல்களில் ஜ்வராதிகாரத்தில் இது காணப்படுகின்றது. ஸித்தயோக ஸங்கிரகத்தில் யுக்திக்கேற்ப சற்று யோகம் மாறுபடுகின்றது. ஸந்நிபாத ஜ்வரத்தில் வாதகப தோஷங்கள் பலப்பட்டு ஏற்படும் உபத்ரவங்களிலும், உக்ர ஜ்வர வேகத்திலும் மிகச் சிறந்த கைகண்ட மருந்தென வைத்யர்களால் கையாளப்படுவது.

சுத்தலிங்கம், சுத்த வத்ஸநாபி, பொரித்த வெங்காரம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, மிளகு, திப்பிலி, கஸ்தூரி இவை சமனெடை எடுத்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாற்றால் அல்லது கருநொச்சியிலைச் சாற்றால் அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும்.

சித்தயோக சங்கிரகப்படி பச்சைக் கர்பூரம் இதில் அதிகமாக சேர்க்கப்படுகின்றது. அளவு மற்றவைகளுக்குள்ளது தான்.

அளவு—1—2 மாத்திரை. அனுபானம்—வெற்றிலைச்சாறும் தேனும், தேன், இஞ்சிச்சாறும் தேனும், ஸுதர்சன சூர்ணமும் தேனும், தசமூல—தேவதார்வாதி, தசமூலகடுத்ரயாதி, பார்ங்க்யாதி, தகராதி—கஷாயங்களில் ஏதாவதொன்றும், தேனும், தேவைக்கேற்ப வேறு அனுபானங்களும் கொள்ளலாம்.

குணம்—ஜ்வரத்தின் வேகத்தையும் தாபத்தையும் குறைத்து ஹிருதயம் விருக்கம் இவைகளின் பலத்தை அதிகமாக்கி நாடித் துடிப்பைச் சீர்படுத்தும் குணமுள்ள நாபி, நாபியின் சக்தியை சீராக்கி ஹிருதயத்திற்கும் சுவாஸாசயத்திற்கும் மற்ற இந்திரியங்களுக்கும் நல்ல வலிவூட்டி கபவாத தோஷங்களைச் சீர்செய்யும் கஸ்தூரி; கபதோஷத்தை மாற்றி கபத்தை வெளிக்கொணர்ந்து

ஜ்வரதாபத்தைக் குறைக்கும் லிங்கம்; அதிக வியர்வை, நாடித் தளர்ச்சி போன்ற தோஷங்களை மாற்றும் பச்சைக்கர்பூரமும், ஜாதிக்காயும் ஜாதிபத்திரியும்; நல்ல தீபன பாசனங்களான திப்பிலியும் மிளகும்; ஆக இந்த முறையில் சேர்ந்துள்ள ஒவ்வொரு சரக்கும் தனித்தனியே இதன் மகத்துவத்திற்குப் பெரிதும் காரணமாகின்றன. ஒரே மருந்தில் இவ்வித விசேஷ சக்திகள் ஒன்று கூடிக் காணப்பெறுவது அபூர்வமே.

இதன் உபயோகம் விசேஷமாக வாதஜ்வரத்திலும் கபஜ்வரத்திலும் கபவாதஜ்வரத்திலும் சிறந்தது. ஸந்நிபாதஜ்வரத்தில் வியர்வை அதிகமாகி உடல் குளிர ஆரம்பிக்குங்காலும், கால் கை சில்லிட்ட போதும், நாடி தளர்ந்த போதும், பிதற்றல் மயக்கம் ஏற்பட்டபோதும், இதன் உபயோகம் மிகச் சிறந்தது. ஹிருதயரோகமுள்ளவர்களுக்கு கஸ்தூரி சேர்ந்த மற்ற மருந்துகள் கொடுப்பதைக் காட்டிலும் நாபி பச்சைக்கர்பூரத்துடன் கஸ்தூரி சேர்ந்த இம்மருந்து நன்ருக ஒத்துக்கொள்ளுகின்றது. உடல் முழுதும் வலி, அதிகத்தலைவலி, இடுப்பு விட்டுப்போய் விடுவது போன்ற வலி; மற்றும் ஆமவாதம் போன்ற வாத நோய்களில் ஏற்படும் ஜ்வரம்-இவைகளில் தசமூல—தசமூல கடுத்ரயாதி கஷாயங்களுடன் கொடுப்பது நல்லகுண மளிக்கின்றது. பிரஸவித்தமாதருக்கு, பிரஸவித்த பின் பலவீனத்தாலோ ஸூதிகாவாதத்தால் ஏற்படும் ஸாதாரண ஜ்வரங்களிலும், ஸந்நிபாத ஜ்வரங்களிலும் கைகண்ட மருந்து. இவ்வித ஸூதிகா ஜ்வரங்களில் தேவதார்வாதி கஷாயம் மிகவும் நல்லது.

குறிப்பு: இம்முறையில் சில வைத்யர்கள் விசேஷ குணமேற்படுத்த லிங்கத்திற்குப் பதில் குப்பி எரிப்பு முறையில் தயாரிக்கப்பட்ட ரஸஸிந்தூரம் சேர்ப்பதுண்டு. சிலர் மகரத்வஜ ரஸத்தைச் சேர்ப்பர். அதனுல் ஜ்வர நிலையிலும் மற்ற வாத ரோகங்களில் ரஸாயனமாகச் சில நாள் தொடர்ந்து உபயோகிக்கவும், அதிக குணம் தருகின்றது. நரம்பு நாடி ஹிருதயம் சுவாஸாசயம் இவைகளுக்கும் நல்ல வலிவு ஏற்படுகின்றது.

ஹ்ருதயம் மிகவும் துர்பலமானவர்களுக்கு நாபி ஒத்து கொள்ளாதென்ற சங்கையிருப்பின் நாபியை நீக்கி அதற்கு

லாக சுத்திசெய்த எட்டிக்கொட்டைவித்தும் அம்பரும் வகைக்கு சமனெடை சேர்த்துக் கொள்வதும் சிலரது வழக்கம். எட்டிக் கொட்டை வித்தும் அம்பரும் ஹிருதயத்திற்கு வலியூட்டுவதிலும் ஊக்கமளிப்பதிலும் நிகரற்றவை. இம்முறை வாதரோகங்களில் நல்ல குணமளிப்பதுடன் நரம்புத்தளர்ச்சியைப்போக்கி சம்போக சக்தியை அளிக்கின்றது. ஆனால் ஹிருதயப் படபடப்பு, ஹிருதய விஸ்தரிப்பு உள்ளவர்களுக்கு இம்முறை அவ்வளவு ஒத்துக்கொள் வதில்லை. அதில் முதன் முறை தான் நல்லது.

இதற்கு அனுபானமாக உபயோகப்படும் சில க்ஷாயங்கள்:—

**தேவதார்வாதி:**— தேவதாரு, வசம்பு, வாசனைக் கோஷ்டம், திப்பிலி, சுக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கடுகுரோகிணி, மல்லி விதை, கடுக்காய், யானைத்திப்பிலி, காஞ்சூரி, நெரிஞ்சில் முள், கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, ஆனைக்கொம்பன் அதிவிடயம், சீந்திற்கொடி, கர்கடசிங்கி, கருஞ்சீரகம் இவை வகைக்கு சமனெடை. 2½ தோலா கஷாயத்திரவ்யத்தை 16 அவுன்ஸ் ஜலத்திலிட்டு நான்கில் ஒரு பங்கு மீதமாகக் கஷாயமாக்கி 1–2 அவுன்ஸ் அளவு தேன் சேர்த்துக் கொடுக்கவும். ஸூதிகாஜ்வரத்தில் நல்லது. உடல் வலி, இருமல், மயக்கம், தலைவலி, குளிர், பிதற்றல், அசதி இவைகளை உடனே குறைக்கும். பிதற்றல் அதிகமாக இருந்தால் இத்துடன் கிராம்பு, பிரமிப்பூண்டு அல்லது வல்லாரை, ஜடாமாஞ்சி, அஸாரூன், சங்கங்குப்பி, குரோசானி ஓமம் இவைகளையும் வகைக்கு சமனெடை சேர்த்துக்கொள்ளவும். பிரஸவித்த ஸ்திரீக்கு தேவதார்வாதி கஷாயத்திரவ்யத்துடன் சமம் தசமூலமும் சேர்த்துக் கஷாயமிட்டு தினமும் இரண்டு வேளை கொடுத்துவர ஸூதிகாநோய்கள் வரவே வராது.

**தகராதிகஷாயம்:** அஸாரூன், பர்படகம், சரக்கொன்னைப்புளி, கோரைக்கிழங்கு, கடுகு ரோகிணி, ஜடாமாஞ்சி, அமுக்கராக்கிழங்கு, பிரமிப்பூண்டு, திராக்ஷை, சந்தனத்தூள், தசமூலம், சங்கங்குப்பி இவை வகைக்கு சமனெடை சேர்த்து இடித்து முன்போல் க்ஷாயமிட்டுக் கொடுக்கவும். ஸந்நிபாதஜ்வரத்தில் பிதற்றல் அதிகமாக இருக்கும் தருணத்தில் மிகவும் சிறந்தது. மலமிளகி வெளிப்பட்டுக் கொண்டிருந்தால், இம்முறையிலுள்ள கடுகு

ரோகிணி, சரக்கொன்னைப்புளி, திராக்ஷை இவைகளை விலக்கி உபயோகிக்கவும்.

**தசமூலகடுத்ரயாதி:** தசமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஆடாதோடை இவை வகைக்கு சமனெடை கஷாயமிட்டுத் தேன் சேர்த்துக் கொடுப்பது. சுவாஸம், மார்பில் கபம், முதுகு இடுப்பு பிடரி தோள்பட்டை இவைகளில் வலியுடன் ஏற்படும் ஜ்வரங்களில் நல்லது.

**பார்ங்க்யாதி:** சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, பர்படகம், மல்லிவிதை, சிறுகாஞ்சூரி, சுக்கு, நிலவேம்பு, வாசனை கோஷ்டம், திப்பிலி, கண்டங்கத்திரிவேர், சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் குளிருடன் ஏற்படும் முறைஜ்வரங்களில் மிகச் சிறந்தது.

## பிருஹத்கஸ்தூரி பைரவ வடீ.

பைஷஜ்யரத்னாவளி, ரஸரத்னாகரம், தன்வந்தரி, ரஸராஜஸுந்தரம், ரஸசண்டாம்சு, ரஸேந்திரஸாரஸங்கிரகம் இவைகளில் உள்ளது. இதில் இரண்டு முறைகள உண்டு. அதிகமாக வழக்கிலிருக்கும் முறையே இங்கு கொடுக்கப்படுகின்றது. கஸ்தூரிபைரவத்தைக் காட்டிலும் நீடித்து உபயோகிப்பதற்கும் ரோகத்தின் உக்ரநிலையைத் தணிப்பதற்கும் சிறந்தது.

கஸ்தூரி, பச்சைக்கர்பூரம், தாம்ர பஸ்மம் காட்டாத்திப்பூ, பூனைக்காலிவித்து, வெள்ளிபஸ்மம், தங்கபஸ்மம், முத்துபஸ்மம், பவழபஸ்மம், அயஸ்பஸ்மம், வட்டத்திருப்பி, வாய்விடங்கம், கோரைக் கிழங்கு, சுக்கு, விலாமுச்சம்வேர், சுத்ததாளகம், அப்பிரகபஸ்மம், நெல்லி முள்ளி. இவை வகைக்கு சமனெடை எடுத்து எருக்க இலைச்சாற்றால் இரண்டு தினங்கள் அரைத்து 3–4 யவ அளவில் மாத்திரைகள் செய்துகொள்ளவும்.

அளவு—அனுபானம்: கஸ்தூரிபைரவத்திற்குப் போல்.

குணம்: கஸ்தூரிபைரவத்தைக் காட்டிலும் விசேஷ குணமளிக்கவல்லது. பிதற்றல் மயக்கம் இவைகளுடன் கூடிய ஸந்நிபாதஜ்வரங்களிலும், ஸூதிகாரோகங்களிலும் கஸ்தூரிபைரவத்தை விட நல்ல குணமளிக்கவல்லது.

# பால சிகித்ஸா—3

வைத்ய விசாரத எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி.)

## ஆரோக்ய கல்பத்ருமம் :

### பிறந்த உடன் முதல் மூன்று நாட்களில்

சிசுவைக் குளிப்பாட்டிய பிறகு நெல்லி முள்ளித்தூளையும் தங்கத்தையும் இழைத்துத் தேன் நெய் சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது பிராம்மி, வசம்பு, கடுக்காய், ஸ்வர்ண மாக்ஷிகம், தங்கம் இவைகளைப் பொடித்து அத்தூளை இழைத்துத் தேன் நெய் கலந்தும் கொடுக்கலாம்.

மார்பகத்திலுள்ள ஸிரைகளின் துவாரம் விரிவடைவதை யொட்டி மூன்ருவது அல்லது நான்காவது நாளுக்கு முன்னர் தாய்ப்பால் உண்டாவதில்லை. அதனல் நெய்யையும் தேனையும் சேர்த்து அதில் அருகம் புல் நுனி போட்டு சுத்தி செய்து, நன் மந்திரங்கள் ஓதி, அருகம்புல்லை எடுத்தெறிந்து அத் தேனையும் நெய்யையும் அன்று மூன்று தடவை கொடுக்கவும். இரண்டாவது நாள் நறுந்தாளியின் சாறும் கல்கமுமிட்டுத் தயாரித்த பசுவின் நெய்யைத் தேன் கலந்து மூன்று நேரம் கொடுக்கவும். இவ்விதம் தாய்ப்பால் உண்டாகும் வரை கொடுத்து வரவும்.

அல்லது பிரசவித்த ஸ்த்ரீக்குச் சமமான தேகப்பாங்கு உடையவளும் அதே ஜாதியில் உதித்தவளும் சமமான மனதுடையவளும், நல்ல ஆரோக்கிய முள்ளவளும், பிரசவித்தவளுக் குத் தோழியாயு முள்ள ஸ்திரீயின் முலைப்பாலையும் கொடுக்கலாம். இவ்விதத் தகுதி பெருதவளின் பால் கொடுப்பது சரியல்ல.

முலைப்பால் கொடுக்குமுன்னர் சிசுவின் உள்ளங்கை யளவுள்ள புதிய பசுவின் வெண்ணெய்யைப் புகட்டி விட்டுப் பிறகு பால் கொடுக்கவும். இவ்விதம் தினம் காலையிலும் மாலையிலும் தேக சக்திக்கேற்றவாறு இம்முறையைப் பின்பற்றுவது நல்லது.

சிசுவிற்குப் பால் கொடுக்கு முன் முலைக்காம்புகளை சுத்த ஜலத்தாலோ, சந்தனம், விலாமுச்சம்வேர், சித்தாமுட்டி இவைகளின் கஷாயத்தாலோ நன்கு அலம்பவேண்டும்.

தாயின் பால் தான் சிசுவிற்கேற்றது. தாய்ப்பால் கொடுக்க முடியாவிடில், பால் கொடுக்கக்கூடிய இரு தாதிகளை அமர்த்த வேண்டும். அவர்கள் சிசுவிடம் அன்புள்ளவர்களாயும், அங்கக் குறைவில்லாதவர்களாயும், நோயற்றவர்களாயும் நடுவயதினரா யும், உயிருடனிருக்கும் சிசு உள்ளவர்களாயும், ஜாதி-தேகப்பாங்கு இவைகளில் தாயுடன் ஒற்றுமை உளளவர்களாயும், பிரம்மசர்யம் உள்ளவர்களாயும் (புருஷசங்கமில்லாதவர்களாயும்) இருக்கவேண் டும். அவர்களது பால் கெடாதவாறு ஹிதமாக ஆகாரத்தையும் நடவடிக்கைகளையும் பாதுகாக்க வேண்டும்.

## தாய்ப்பால் குறைவதன் காரணம்.

அபானவாயுவின் கட்டுப்பாட்டிலுள்ள மல மூத்திராதிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தலாலும், சோகம், உபவாசம், ஆயாசம் இவைகளாலும் சுக்லதாதுக் குறைவாலும், அதிகமாக நெருப்பின ருகே இருத்தலாலும், இரவில் கண் விழித்தலாலும், வரட்சி, யாயும் சூடாயும் உள்ள ஆகாரத்தை அதிகமாக உண்பதாலும் ஸ்னேகம் (எண்ணெய் தேய்த்துக் குளித்தல், நெய் போன்று எண்ணெய்ப்பசை பதார்த்தங்கள் உண்ணுதல் போன்றவை) குறைவதாலும் தாயிடம் பால் பெருகுவது குன்றுகிறது.

## தாய்ப்பால் குறைவைத் தடுக்க:—

முன் கூறிய காரணங்களால் தாயிடம் பால் குறைந்தால் முருங்கை இலையை (நரம்பெடுத்து உப்புகூட்டி வேகவைத்து) வெந்தபின் சிறிதளவு நெய் விட்டு வதக்கி அதைச் சாப்பிட தாய்ப்பால் பெருகும். அடபதியன் கிழங்கின் கஷாயத்தை நெய் சேர்த்துச் சாப்பிடுவதாலும், அடபதியன் கஷாயத்தில் அரிசி வேகவைத்துக் கஞ்சியாக்கி அதில் தேங்காய்ப்பால் சேர்த்துச் சாப்பிடுவதாலும் தாயிடம் பால் பெருகும். அவ்விதமே தாமரை கேசரத்தையும் சிந்திற்கொடியையும் தூள்செய்து நெய்சேர்த்துச் சாப்பிடுவதும், அடபதியன் கிழங்கு, நன்னரி, கோரைக்கிழங்கு, நெல்லிமுள்ளி இவைகளின் சூர்ணத்தை நெய்யுடன் சாப்பிடுவதும் நல்லது.

கவலை துக்கமிருந்தால் அதைப்போக்கி அவளுக்கு மனதிற்கு உற்சாகமளிக்கவேண்டும். அறுபதாங் குருவையரிசி (நவரை

அரிசி) யின் சாதத்தை நெய்சேர்த்து அருந்தச் செய்யவேண்டும், இரவில் பாலுடன் நவரை அரிசிச் சாதத்தையோ அல்லது எளிதில் ஜீர்ணமாகும் மற்ற அரிசியின் சாதத்தையோ சாப்பிடலாம்; அல்லது சசாங்ககிரணமெனும் திரட்டுப் பால் பக்ஷணத்தைச் சாப்பிடுவதும் நல்லது.

இவ்விதம் செய்தும் தாய்ப்பால் பெருகவில்லையாகில், நடு நடுவே வாயுவை அனுலோமனம் செய்யக் கூடிய விசேஷ முறைகளை ஆராய்ந்து உபயோகிக்கவேண்டும். அவையாவன—

சிற்றுமுட்டிவேர், அதிமதுரம், வெள்ளைச்சாரணை, காட்டுளுந்து வேர், காட்டுப்பயறுவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், சித்தரத்தை. அமுக்கராக் கிழங்கு. தேவதாரு, புத்தரிச்சுண்டை வேரின் மேல் தோல், சுக்கு, ஜீரகம், திராக்ஷை, சாரைப்பருப்பு, கோதுமை இவைகளின் கஷாயத்தை நெய்யும் பாலும் சேர்த்துச் சாப்பிடலாம். வேறு மார்க்கத்தில் செல்லும் வாயுவை அனுலோமனம் செய்து வழிப்படுத்தி ஸ்தன்யத்தையும் அதிகப்படுத்துமாதலால் இதை விசேஷமாக உபயோகித்தல் நலம். பாலுள்ள ஹிதமான ஓஷதிகளையும் பாலையும் 'சீது' எனப்படும் மது வகையைத் தவிர மற்ற மதுவர்க்கங்களையும் நீர்ப்பாங்கான தேசத்திலுண்டான பிராணிகளின் மாம்சத்தையும் ஆகாரவகையாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

எத்தனை நாட்களுக்கு சிசுவின் தாயார் சிசுவிற்கு பால் கொடுக்க முடியாமலிருக்கிறாளோ, அத்தனை நாள் தாதிகள் பால் கொடுக்க வேண்டும். தாதி இல்லாவிடில் தாய்ப்பாலுக்குச் சமமாக எளிதில் ஜீர்ண மாகும்படி பசுவின் பாலையோ ஆட்டின் பாலையோ புகட்டலாம். பாலில்லாமல் ஒருநாள் கூட தள்ளக்கூடாது.

அவ்விதம் முலைப்பாலில்லாமல் ஆட்டுப்பாலோ பசுவின் பாலோ கொடுக்க நேரிடின், ஓரிலை வேரையோ, ஓரிலை வேர் மூவிலைவேர் இரண்டையோ, சிறுபூளை வேரையோ, முள்ளுக் கத்திரி வேரையோ இடித்துக் கிழிகட்டி முறைப்படி பாலிலிட்டுக் காய்ச்சி சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவேண்டும். தனிப்பாலாக புகட்டக் கூடாது.

(தொடரும்)

## செய்திகள் :

### இந்திய சுகாதாரத் திட்டம்.

மத்திய சர்க்காரின் சுகாதார சம்பந்தமான பட்ஜெட் விவாதங்களை ஆராயும் போது சர்க்கார் சுகாதார விஷயமாக பல கோடி ரூபாய்களுக்கான திட்டங்கள் வகுத்துவருகின்றனர் என்பது நன்கு விளங்கும். இந்தியா சுதந்தர மடைந்தபின் ஏழு வருஷங்களுக்குள் இந்தியனின் வயது சராசரி 27-லிருந்து 34க்கு அதிகமாகி யிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. சர்க்கார் சிப்பந்திகளுக்கு இலவச வைத்ய உதவி அளிப்பதற்கு முன்னேற்பாடாக, ஒரு இன்ஷ்யூரனஸ் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. அதாவது வைத்ய உதவியை சமூக சேவையாக மாற்ற இது முதல் படியாகும். இந்தியாவில் பெருவாரியான மக்களுக்கு நாசகாரணமாக விளங்கும் மலேரியா நோயை அகற்றுவதற்கான திட்டம், நடக்கும் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இடம் பெற்றுள்ளது. இது 1250 லக்ஷம் மக்களுக்கு மலேரியா நிவாரண உதவி அளிக்கும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய நாடு முழுவதும் மலேரியாவை ஒழிப்பதற்கான திட்டம் வகுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் சென்னை அரசாங்கமும் வத்தலக் குண்டிலும், சேலத்திலும் மலேரியாத் தடுப்புக் கழகங்கள் ஆரம்பிக்க விருக்கிறார்கள். ஜூலை மாதம் முதல் மற்றும் சேலம் ஜில்லாவின் தென் பாகம், மதுரை, தென்னார்காடு ஜில்லாவில் காலராயன் மலைப் பக்கம், ராமேசுவரம், குண்டபூர், காஸர்கோடு, நீலகிரி ஆக ஏழு இடங்களில் மலேரியாத்தடுப்பு முறை ஏற்பாடுகள் மும்முரமாக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை மலேரியாவைப் பரப்பக் கூடிய கொசு பிறவாமலே தடுக்கவும், பிறந்தாலும் வளருமுன்பே அதைச் சாக அடிக்கவும், அதையும் மிஞ்சி வளர்ந்து நோயை உண்டாக்கினால் அதைக் குணப்படுத்தவும் ஏற்ற முறைகள் ஆராய்ச்சிகளின் பலனாகக் கிடைத்திருக்கின்றன. உடனடியாக இருபது லட்சம் மக்களுக்கும், தொடர்ந்து மேற்கொண்டு பத்து லட்சம் மக்களுக்கும், நிவாரணம் அளிப்பதே சென்னைராஜ்யத் திட்டத்தின் நோக்கம். இந்த மலேரியா நிவாரணதிட்டத்திற்கு மொத்தம் இந்தியாமுழுவதும் செலவாகக் கூடிய தொகை பதினைந்தரைக் கோடி. இதில் பாதித் தொகை அமெரிக்கா நன் கொடையாக அளிக்கின்றது. பாதியை இந்திய மத்திய—ராஜ்ய சர்க்கார்கள் பகிர்ந்து

கொள்கின்றனர். சென்னை அரசாங்கம் மாத்திரம் பிரதிவருஷம் 1250 லக்ஷரூபாய் மலேரியா தடுப்பிற்கு செலவு செய்ய விருக்கின்றது.

கிராமங்களில் சிசு பரிபாலனம், பிரசவகால மருத்துவம், சமூக சுகாதாரம் இவைகளில் பூர்ண உதவி அளிக்கத்தகுந்த கிராமசேவகர்கள் கல்கத்தாவிலுள்ள அகில இந்திய சுகாதார ஸ்தாபனத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். சுகாதாரத்தைப் பரப்பும் விஷயத்திலோ மற்ற சுகாதார சம்பந்தமான திட்டங்களிலோ எல்லா ராஜ்யங்களிலும் ஒருவகைப்பட்ட முறையைக் கையாள முடியவில்லை. இந்த சிரமத்தைத் தவிர்க்க Auxiliary Personnel என்ற வைத்ய உதவியாளர் பயிற்சியும், சமூக நலத்திட்டத்தின் (கம்யூனிடிப்ராஜெக்ட்) கீழ் கிராம சேவகர்கள் பயிற்சியும் தேவைக்கேற்றவாறு செய்யும்படி ராஜ்ய சர்க்கார்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

க்ஷய நோய்த் தடுப்பில் பி. ஸி. ஜி வாக்ஸினின் சக்தி நன்ருக இருப்பதால், அது விஷயமாக மேலும் ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படுகின்றன. ஆறுவருஷங்களுக்கு முன் நாடு முழுவதும் க்ஷய நோயாளிகளுக்கு 5000 படுக்கைகளே இருந்தன. தற்சமயம் அது நான்கு பங்காகப் பெருக்கப்பட்டிருக்கின்றது. வரும் ஐந்தாண்டுகளுக்குள் ஐம்பதினுயிரம் படுக்கைகள் கொண்ட க்ஷய ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்கப்படும்.

## இந்திய வைத்ய டாக்டர்கள் அந்தஸ்து.

சமீபத்தில் சுகாதார மந்திரி ஸ்ரீ ஷெட்டி அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு இந்திய வைத்யக்கல்லூரி மாணவர் அந்தஸ்து விஷயமாக கொடுத்துள்ள தகவல் பின்வருமாறு— டெலிபோன் டைரெக்டரியில் ஜி. ஸி. ஐ. எம்., எல். ஐ. எம். வைத்யர்களின் பெயர்களை வைத்யர் எனத் தனியே குறிப்பிடுவது பற்றி— வந்த புகார்கள் ஆராயப்பட்டு அவர்களையும் டாக்டர்கள் என்ற பத்தியிலேயே சேர்க்குமாறு டெலிபோன் இலாகாவிற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. எல். ஐ. எம்., ஜீ. ஸி. ஐ. எம். களை தற்போதுள்ள இந்திய வைத்யப்பதிவு ரிஜிஸ்தரிலிருந்து அகற்றித் தனியே பதிவு செய்ய ஒரு சட்டம், வரும் சட்டசபைக் கூட்டத்தில் பிரேரேபிக்கப்

படலாம். ஆங்கில வைத்யர்களுடன் சேர்த்து இவர்களைப் பதிவு செய்வதை மெடிகல் க்வுன்ஸில் ஆக்ஷேபிக்கின்றது. அதற்காகவே தனியே ரிஜிஸ்தர் செய்வது, ஜி. ஸி. ஐ. எம். கல்வியை ஐந்து வருஷத்திற்குப் பதிலாக நான்கு வருஷங்களுக்குள்ளாக்கி, மேல் ஒரு வருஷம் ஒரு அலோபதி ஆஸ்பத்திரியில் கட்டாயமாக ஹவுஸ் ஸர்ஜனாக இருக்கவேண்டுமெனப் படிப்புத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. விசேஷமாக இவ்வருஷம் இக்கலாசாலையிலேயே பேதாலஜி லாபரேட்டரி ஆரம்பிக்கப்படுகின்றது. ஜி. ஸி. ஐ. எம், எல். ஐ. எம். பயிற்சி பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் யோக்கிய தாபத்ரங்களில் அவர்கள் ஆங்கில—இந்தியவைத்ய முறைகளிரண்டிலும் பயிற்சி பெற்றவர்கள் என்றும் இருவகை வைத்ய முறைகளையும் அப்பியசிக்கத் தகுதி பெற்றவர்கள் என்றும் மாறுதல் செய்யப்பட்டு, அந்த யோக்கியதாபத்திரங்கள் தனித்த ஒரு விழாவில் அளிக்கப்படும்.

*
* *

## திருச்சி ஆயுர்வேத ஸபா.

ஸபையின் மாதாந்தரக் கூட்டம் சென்ற 20—6—54 மாலை 4-40 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஸ்ரீரங்கம் P. G. கணபதி சாஸ்திரிகள், ஆயுர்வேத பூஷணம் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ பகவான் தன்வந்தரி பிரார்த்தனைக்குப் பிறகு, ஸமீபத்தில் காலமான ஜயபூர் பிஷகாசார்ய ராஜ வைத்ய ஸ்ரீ நந்தகிசோரசர்மா அவர்கட்கும், கார் மெடிகல் காலேஜ் புரொபஸர் ஸ்ரீ B. N. பானர்ஜி அவர்கட்கும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அவரவர்களுடைய குடும்பத்தாருக்கு அனுப்பப்பட்டன.

பிறகு "விஷமஜ்வரம்" என்னும் விஷயத்தைப்பற்றி அங்கத்தினர்கள் மிகவும் ரஸமாக சர்ச்சை செய்தார்கள். அவ்வமயம், நவீன வைத்திய முறையில் "மலேரியா" என்று சொல்லப்படும் வியாதிக்கும், "விஷமஜ்வரம்" என்ற வியாதிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விவாதித்தனர். சிகித்ஸையைபற்றி சர்ச்சை செய்கையில், ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்தில் கைகண்ட ஔஷதங்களை விரிவாக எடுத்துரைத்தார்கள். அவற்றுள், சீந்தில் கொடி, எழிலம்பாலைப்பட்டை, நில வேம்பு, தும்பை முதலான மூலிகை ஔஷதங்களும், வெள்ளைப் பாஷா

ணம் போன்ற ரஸௌஷதங்களும் மிகவும் உபகாரமளிக்கின்றன என் அபிப்பிராயப் பட்டார்கள்.

கடைசியில் தலைவருடைய முடிவுரையுடன் கூட்டம் மாலை 6 மணிக்கு இனிது முடிவடைந்தது.

—கார்யதர்சி.

* * *

## உத்தர பிரதேசத்தில் ஆயுர்வேத கலாசாலை.

உத்தர பிரதேசத்தில் தலைநகரிலேயே ஒரு ஆயுர்வேதகலாசாலையை ஆரம்பிக்க மந்திரிசபை திட்டமிட்டிருக்கிறது. இது லக்ஷ்மணபுரி ஸர்வ கலாசாலையுடன் இணைக்கப் பெறும். வைத்யப்பயிற்சிக்கு வேண்டிய ஆஸ்பத்திரி வசதிகளுடன் ஆரம்பத்தில் 48 படுக்கைகளும் பிற்பாடு 52 படுக்கைகளும் கூடிய நோயாளி உள்தங்கி வசிக்கும் ஆதுராலயத்துடன் இது அமைக்கபெறும். இது கூடிய சீக்ரம் துவக்கப் பெறுமென எதிர் பார்க்கப் படுகின்றது.


# திருச்சி

## ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்

17, சின்னக்கடைத் தெரு,
தெப்பக்குளம் P.O. திருச்சிராப்பள்ளி,

## வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.
விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

# அரசாங்கம் ஆதரித்திருந்தால்....

[உத்தர ப்ரதேச கவர்னர் ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்கள் இந்திய கலை பண்பாடு விக்ஞானங்களில் அளவற்ற அபிமானமுள்ளவர். அவைகளின் மேம்பாட்டில் அவர் காட்டும் ஆர்வம் போற்றத் தக்கது. இன்று ஸம்ஸ்கிருத பாஷைக்கும் இந்தியகலைகளுக்கும் நல்ல பயிற்சி அளிப்பதன் மூலமும் பிரசாரத்தாலும் உலகெங்கும் இந்தியாவின் புராதன மேம்பாட்டை பிரசாரம் செய்யும் பம்பாய் பாரதீய வித்யா பவனத்தின் குலபதி ஸ்ரீமான் முன்ஷி ஆயுர்வேதத்தைப் பற்றி குலபதியின் கடிதங்கள் என்ற தொடர் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள அபிப்பிராயங்கள், அவர் ஆயுர்வேதத்திடம் வைத்துள்ள நன்மதிப்பையும் அதன் வளர்ச்சியில் அவரது ஆர்வத்தையும் காட்டும். 4—4—1954-ந் தேதியில் வெளியான "குலபதியின் கடிதங்கள்—45" என்ற பிரசுரத்திலிருந்து இவை எடுக்கப்பட்டுள்ளன. —ஆசிரியர்.]

"டிஸம்பர் 24-ம் தேதியன்று ஜான்ஸி வந்தோம். இந்நகரில் ஒரு ஆயுர்வேத யுனிவர்ஸிடி இருக்கிறது. அதற்கு நன்கு உதவி செய்தால் இந்தியா முழுவதும் உள்ள ஆயுர்வேத கலாசாலைகளை நிர்வகிக்கும் சிறந்த யுனிவர்ஸிடியாகலாம்.

சென்ற நூற்றுண்டில் சர்க்காரின் ஆதரவின்மை காரணமாக ஆயுர்வேதம் குன்றத்தலைப்பட்டது மிகவும் வருந்தத் தக்கதே. அலோபதி வைத்ய முறைக்குச் செலவாகிய தொகையில் பத்தில் ஒரு பங்கு ஆயுர்வேதத்திற்கு செலவழிக்கப்பட்டிருப்பின் இந்திய மக்களது நோய் நிவாரணத்திற்கு அளவற்ற உதவி அளித்திருக்கலாம். ஆயுர்வேதமும் அலோபதி வைத்யத்துடன் போட்டியிட்டு முன்வந்திருக்கும். நவ இந்தியாவின் அதிகாரம் செல்வாக்கு படைத்த அலோபதி டாக்டர்களில் வெகு சிலரைத் தவிர எல்லோரும் சிறந்த யோக்யதை உள்ளவர்களே. ஆனால் அவர்கள் இதுவரை செய்ததெல்லாம் ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி அவசியம் செய்யவேண்டியதற்கு எதிர்ப் பிரசாரமே.

கிருஸ்துவ மிஷனரிகள் ஒருகாலத்தில் நம்மை (இந்தியரை) நாகரீக மற்றவர்கள் எனக் கூறினர்கள். நமது சிறப்புற்ற அலோபதி டாக்டர்கள் ஆயுர்வேதம் விக்ஞானத் தன்மையற்றது என மூடுகிருர்கள். பல லக்ஷக்கணக்கில் மக்கள் தினந்தோறும் ஆயுர்வேத சிகித்ஸை பெற்று வருகிருர்கள். சஸ்திர சிகிச்சைகளேயும் சில ஆண்டிபயாடிக் மருந்துகளேயும் ஸல்பானிலமைட் மருந்துகளேயும் தவிர வெளிநாட்டு அலோபதி மருந்துகளேக் காட்டிலும் ஆயுர்வேத மருந்துகள் எவ்வகையிலும் தாழ்ந்தவையல்ல. எனக்கு வைத்ய முறைகளேப்பற்றிய பரிசயம் கிடையாது. ஆனல் நான் ஓர் மருந்து நிறைய உபயோகிக்கும் நிபுணன். அதனல் இவ்விஷயம் எனக்கு தெரிந்திருக்க வேண்டும். ஓர் நேர்மையான பக்ஷபாதமற்ற தன்மையுடன் நான் ஆயுர்வேத-யூனனி-ஹோமியோபதி-அலோபதி மருந்துகளில் பலவகைப்பட்டவைகளேச் சாப்பிட்டும் இன்று பிழைத்திருக்கிறேன். மிகவும் துர்பலமான தேக அமைப்புள்ள நான் மூன்று நான்கு ஆயுர்வேத மருந்துகளே வெகுநாட்களாக உபயோகித்து வராவிடில் இன்று எனக்குள்ள சிறிதளவான சக்தி கூட இருக்காது என்பது என்னவோ வாஸ்தவம் தான்.

—கே. எம். முன்ஷி."

## மஹாமண்டல வெளியீடுகள்

1. திரட்டு வாகடம் 0—6—0
2. சித்தர் மூறை 0–12—0
3. போபதேவசதகம். (தமிழ் மொழிபெயர்ப்பு) 1—4—0
4. சிகித்ஸா கலிகா ,, 0–12—0
5. பழைய வைத்ய சந்திரிகை பிரதிகள்
   ஒரு வருஷத்தியது 2—0—0

தபால் செலவு தனி. வி. பி. கிடையாது. மூன்பணமூம் அனுப்பவும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
27. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம், திருச்சி.

ஸ்ரீ:

# அப்யுதய கேந்த்ரங்கள்

த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
தலைவர், தமிழ்நாடு ஆயுர்வேதமஹாமண்டலம்.

நாட்டின் நலம் நம்முடைய நலம். வைத்தியர்களுடைய பரம லக்ஷ்யம் எல்லோரும் இன்புற்றிருக்க உழைப்பதே. அதனால் தான் நம்முடைய ரிஷிகள் ரோகங்கள் ஏற்படாதிருக்கும் பணிக்கு முதன்மை ஸ்தானம் அளித்து அதற்கானவிதிகளை நன்கு போதித்தார்கள். அந்தவிதிகளை சரிவர அனுஷ்டிக்காது நோய்க்கிடம் கொடுத்துவிட்டால் பரமகாருணிகர்களாகிய அம்மகரிஷிகள் ரோகத்தை யகற்றும் பலவித உபாயங்களையும் விவரித்து எச்சரிக்கையும் செய்தார்கள். சிகித்சையினாலேயே எல்லா வியாதிகளையும் அகற்றி ஆரோக்யத்தை திரும்பப்பெற்றுவிடலாம் என்று எண்ணலாகாது. சில வியாதிகள் சிகிச்சைக்கு கட்டுப்படாது அஸாத்யநிலையை எய்துபவைகளாக அமைந்துவிடும். சில, கால தாமதம் செய்தால் மிகவும் கஷ்டசாத்தியமாக மாறிவிடும். சில வியாதிகளின் வேகத்தையும் உபத்திரவங்களையும் தணித்து வைக்கலாமேயொழிய அறவே வேரற்றுப்போகும்படி சிகித்சை செய்ய இயலாது. இதை எல்லாம் விவரித்த வகையில் வியாதியை வருமுன்காக்க முயலுவதே அறிவுடைமையல்லவா?

நாம் பூததயையினால் (ஜீவன்களிடத்தில் அன்புப்பெருக்கால்) பிராணபிசரர்களாக (அவர்களுடைய ஆயுளைப் போஷிக்க முயலுகிறவர்களாக) விளங்கவேண்டும் என்று பாடுபடுவோம் என்றே நம்முடைய ரிஷிகள் ஆயுர்வேதத்தை நமக்கு அளித்தார்கள் என்றால் நம்முடைய கைம்மாறும் குருபக்தியும் எவ்வாறு பரிணமிக்கும் (செயலுக்கு வரும்) என்று விவரிக்க வேண்டுமோ? நாட்டின் நலனுக்கு உழைப்போம் என்று கூறி, முயலுவதும் அல்லவோ நம்முடைய கடமை? அக் கடமையை நன்கு செய்வதை விட நமக்கு பரம லக்ஷ்யம் ஏதும் இல்லை. இதுவே கர்ம யோகம் என்றும் புகழப்படும்.

இந்த நிலையில் நாம் கடமையைப் பிடித்தொழுகுவோம் என்றால் சாஸ்திரம் போதித்தபடி சகலவிதமான துக்கங்களும் (பிணி, பகை முதலியவைகள்) நீங்க நாம் மீண்டும் தெளிந்த ஞானத்

துடன் வேலை செய்வதுடன் நம்முடன் கூடிப்பழகும் ஒவ்வொரு வரையும் அவ்வாறு உழைக்கத் தூண்டவேண்டும். அதாவது தர்மங்களை மீண்டும் மீண்டும் நாமும் கடைப்பிடிக்க முயன்று ஏனைய வர்களையும் அவ்வாறே வாழ்க்கையை சீரமைத்துக் கொள்ளும்படி தூண்டவேண்டும். காலதேசவர்த்தமானத்தை ஒட்டி நம் ஜனங் களின் க்ஷேமத்திற்கு உகந்த புதுப் புது மார்க்கங்களையும் (தர்மங் களையும்) போதித்துப் பழகமுயலுவதே அப்யுதயத்திற்கு நற்குறிக ளாக அமையும். இந்த கைங்கரியங்களையே அப்யுதய கேந்திரங் களில் நாம் எதிர்பார்க்கிறோம்.

ஒவ்வொரு தனி மனிதனும் பொது நன்மைக்கு உழைக்க லாம் என்றால் வைத்தியர்கள் உழைக்கவேண்டும் என்பது கூறா மலே விளங்கும். ஆகவே வைத்தியர் ஒவ்வொருவரும் தங்கள் தங் கள் சொந்தப் பொறுப்பில் தங்களுக்காகவும் தங்களிடம் நாடிவ ரும் ஜனங்களுக்காகவும் உழைக்க முன்வந்துள்ளோம் என்று அறி வித்துக்கொள்ள "அப்யுதயகேந்திரம்" என்று பொறித்த போர்டுகளை தங்கள் தங்கள் வைத்தியசாலையில் பொதுஜனங் கள பார்வைக்கு வரும் விதத்தில் தொங்கவிடுவது முதல்படி யாகும். எந்த காரியமும் சங்கல்பம் இல்லாது செய்தால் பல னுக்கு வராது. ஆகவே நம்முடைய சங்கல்பத்தை இவ்வாறு பரிஷதி விஞ்ஞாபனம் (பொதுமக்களுக்கு அறிவிப்பது என்று இங்கு கொள்ளவும்.) செய்வது பலமான சங்கல்பமாகும். அந்த சங்கல்பம் நம்மை நல்வழியில் போகும் தைரியத்தையும் ஆற் றலையும் கொடுத்து ஊக்கும்.

நம் நாட்டில் சித்தம் ஆயுர்வேதம், யுனானி என்று பலவித மாக வைத்தியர்கள் பிரிந்து நிற்பதால் அவரவர்களுக்குப் பிரிய மானபடி தலைப்பில் "ஆயுர்வேத" அல்லது "சித்த" அல்லது "யுனானி" என்று பொறித்து அடியில் "அப்யுதய கேந்திரம்" என்றும் எழுதி, தங்கள் தங்கள் பெயரையும் வைத்யர்......என்று பொறித்தால் பொதுஜனங்களுக்கு அந்தந்த கேந்திரத்தில் எவ் விதம் சகாயமும் விளக்கங்களும் கிடைக்கும் என்பதை தெரிவித் ததாகும்.

தேசம் பூராவும் ஒன்று பட்டு இவ்வாறு கைங்கரியத்தில் ஈடு படும்பொழுது மக்கள் புதுவாழ்வு எய்துவார்கள் என்பதற்கு

ஆக்ஷேபணையில்லை. ஆனால் ஒருவர் இவ்விதம் போர்டு போட்டு அவருடன் கூடிப்பழகுகிறவர்களுக்கு வைத்திய தர்மங்களை பயன படுமாறு உபயோகித்துக்கொள்ள உதவினாலும் தேசம் அந்த அளவிற்கு நன்மைபெறும்.

அப்யுதய கேந்திரம் வைத்தியனை சிகித்சைக்கு வரும் ஜனங் களுடன் சரளமாகவும் பிரியத்துடனும் கருணையுடனும் பழகி சேவைசெய்ய சந்தர்ப்பம் அளிக்கிறது. அறிவாளிகள் பலர் சரீர பாதையும் சிலசமயம் மன அதிர்ச்சியினால் ஏற்படும் பாதைகளையும் போக்கிக்கொள்ள வைத்தியனிடம் வருகிறார்கள். அதுகாலை பொதுவில் "எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்" என்ற மனோ பாவத்துடன் பெரும்பாலோர் வருவதால் வைத்தியன் வாயைத் திறவாமல் கொடுக்கும் ஔடதத்தை பக்தியுடன் உட்கொள்ளு வார்கள் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை. வைத்தியனுக்கு ஊதிய மும் கிட்டும். ஆனால் வியாதி நீங்கியதும் வைத்தியனைத் தேடார் என்று சொல்லுவது எவ்வளவு உண்மை என்பதை இந்த வைத்தியர் அனுபவபூர்வமாக தெரிந்துகொள்ளுவார்.

அப்யுதய கேந்திரப்பணியில் ஈடுபட்டவைத்தியனாக விருக் கும் பக்ஷத்தில் இந்த பழமொழி பொய்ப்பிக்கப்படும் என்பதை அனுபவம் காட்டும். பிணி என்ற சாக்கில் வைத்தியனை பரிசயம் செய்துகொண்டவர்கள் அடிக்கடி வைத்தியன் இன்றியமையாத துணைவன் என்றே நாடிவருவார்கள். "பித்தம் தெளிய மருந் தொன்றிருக்கிறது பேரின்பம்" என்று விளக்கிக்கூறும் ஆற்றல் அப்யுதய கேந்திரம் இயங்குகையில் தானாகவே கேந்திர வைத்தி யருக்கு ஏற்பட்டுவிடும். நல்லெண்ணத்துடன் கைங்கரியம் செய்கையில் வைத்தியரை சந்திக்கும் ஒவ்வொரு அறிவாளியும் வைத்தியருடைய க்ஷேமலாபங்களில் அக்கரை கொண்டு வேண் டிய உதவிகளைச் செய்ய முன்வருவார் என்பதை என் அனுபவம் என்றால் போதுமா? ஒவ்வொரு வைத்தியரும் தனக்குத்தானே அந்த அனுபவத்தை பெற்று முன்னேறவேண்டும் என்றே "அப்யுதய கேந்திரம் அமையுங்கள்" என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறேன்.

குறிப்பாக நம் இந்தியவைத்தியம் நம் நாட்டிலேயே மக்கள் துரைத்தனத்தால் நன்கு கௌரவிக்கப் படவில்லை என்ற துர்

தசையில் தனி ஒரு இந்திய வைத்தியர் வெற்றிகரமாக தொழிலில் முன்னேறுவது மட்டும் போதாது. ஒவ்வொருவருடைய வெற்றியும் கலையின் வெற்றி என்றுகக்க நம் ஜனங்கள் பக்குவம்பெற அவர்களை நாம்தான் ஊக்கவேண்டும். அதுவே கேந்திரம் மூலம் செய்யப்படும் கைங்கரியமாகும். இவ்வாறு உழைக்க ஆயுர்வேத மண்டலம் வைத்தியர்களை கூவியழைப்பதுடன் வேண்டிய வழிகளில் திட்டங்கள் வகுத்து உதவவும் அவாவுற்றிருக்கிறது. ஆனல் ஒவ்வொரு வைத்தியராக முன்னுக்குவந்து "நான் ஒத்துழைக்கிறேன்; அப்யுதய கேந்திரம் அமைத்து விட்டேன்" என்று மண்டலத்தை ஊக்கினலல்லவா மண்டலம் அவர் வரையிலுமாவது உண்மையான ப்ரதிநிதி ஸ்தாபனம் என்று பெருமையுடன் உழைப்பது சாத்தியம்!

வைத்தியர்களே! இந்த கடைமையில் தவக்கம்செய்து நம் துர்தசைக்கு மேலும் மேலும் அவகாசம் அளிக்காதீர்கள். துரைத்தனத்தில் பற்பல திட்டங்கள் உருவாகின்றன. திடீரென்று நம்முடைய சுதந்திரம் பூராவாகவும் பறிபோய்விடலாம். அதுகாலை ஜனங்களுக்கு உண்மை விளக்கம் அளிக்க கேந்திரங்கள் அமைப்பதுகூட அனுபவசாத்தியம் அற்றதாகிவிடலாம்.

ஆகவே, கலையில் ஆர்வம் உடையவர்கள், தேசமக்களின் ஆரோக்யத்திலும் அப்யுதயத்திலும் (தர்மத்தின் உதவிகொண்டு முன்னேறுவதில்) அக்கரையுள்ளவர்கள், முதலில் ஒவ்வொருவரும் இப்பொழுதே ஒன்றுபட வேண்டும். ஜனங்களை சிறு சிறு கூட்டமாக (அவரவர்களை நாடுகிறவர்கள் என்ற ரீதியில்) பிரித்து நம்முடன் சேர்ந்து பொதுவாக இந்திய கலைக்கும் குறிப்பாக நம் வைத்திய கைங்கர்யத்திற்கும் ஆதரவளித்து உழைக்கவும் முன்வரும்படி ஊக்க அப்யுதய கேந்திரம் ஒன்றே தக்க சாதனம் என்பதை அறிந்து உடனே உங்கள்வரையில் கடைமையைசெய்ய முந்துங்கள்.

ஆயுர்வேத மண்டலத்திற்கு உங்கள் கைங்கர்யத்தையும் அடிக்கடி தெரிவித்தால் கூட்டுறவில் உழைக்க மிகவும் சௌகரியமாகவிருக்கும்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# AYURVEDIC INJECTIONS

## MARTAND PHARMACEUTICALS

(RESEARCH INSTITUTE OF INDIAN MEDICINES)

is the most equipped laboratory of India in which the intelligent research scholars daily carry out researchs under the guidance of our celebrated Director, the first inventor of

**AYURVEDIC INJECTIONS.**

It is due to the precautions, checks and hard labour we take in the preparation of our Ayurvedic Injections that they are so efficacious, act like magic and the cure is permanent. All literature regarding the research and the allied can be had free from the undersigned.

WANTED AGENTS AND SOLE-AGENTS THROUGHOUT THE ANDHRA AND MADRAS PROVINCE.

N. B. *All correspondence in English.*

MARTAND PHARMACEUTICALS,
BARAUT. U. P.
(S. S. Rly.)



ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# நல்வாழ்வு—2

(த. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ)

ஜீவனுடைய யாத்திரை வெகுகாலம் யுகம் யுகமாகத் தொடர்ந்து நடந்து வருகிறது என்று ஆன்றோர் கூறுகின்றனர். பிறப்பும் இறப்பும் தினராத்திரி போல் மாறி மாறி வந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு பிறப்பிலும் உற்றார் உறவினர் என்றும், பெண்டு பிள்ளைகள் என்றும், தனதான்யங்கள் என்றும், சரீரமெடுத்த ஜீவனுக்குப் பல அனுபவங்களைப் பூர்த்தி செய்ய பந்தங்கள் ஏற்படுகின்றன. இவைகளை சரிவர நிர்வகிக்க தனது பூர்வஜன்ம வாஸனையினால் பெற்றுள்ள புத்தி யுக்தி சாமர்த்தியங்களை ஒவ்வொருவரும் பலவிதத்திலும் உபயோகித்து சரீர யாத்திரையை ஒருவாறு நடத்துகிறார்கள். அவ்வித நிலையில் இந்த சம்பத்துகளெல்லாம் அழிவுள்ளவை; சரீரம் அழிந்தவுடன் சரீரத்தைப் போலவே பூமியிலேயே தங்கி விடும்; ஜீவனுடன் உடன் வருவது அவனவன் தனக்கேற்பட்டுள்ள ஜீவிய தசையில் செய்துள்ள புண்யபாபங்களே என்று பட்டினத்தார் சொல்லியிருப்பதை ஒருவரும் மறக்க இயலாது. இந்தப் புண்ய பாபங்கள் தான் வாசனையாகத் தொடர்ந்து மறுஜன்மம் எடுக்கையில் நல்லதோ கெடுதலோ செய்ய ஒவ்வொருவரையும் தூண்டுகிறது. இருந்தாலும் ஒவ்வொரு ஜீவனும் இந்த பந்தத்தில் இருந்து விடுபடுமாறு உழைக்கச் சக்திபெற்றுள்ளது. ஆனால் அதை பயன்படுத்தி விடுதலைபெற

(மோக்ஷத்தையடைய)இந்த கர்மபூமியில்தான் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. என்று கூறப்படுவதை எண்ணுங்கால் நம் வாழ்க்கையைப் பாழ்படுத்தும் பற்பல மனோவிகாரங்களுக்கு இடமளிக்காமல் தூயவாழ்வு பெற பாடுபடுவது மிகவும் முக்கியம் என்பது நன்கு விளங்கும். இதுதான் நல்வாழ்வு எனப்படும்.

இந்த நல்வாழ்விற்கு இன்றியமையாதது ஆரோக்யம் படைத்த சரீரம். எல்லா தருமங்களுக்கும் முதன்மையான சாதனம் சரீரம்தான் என்பதை மறுக்கமுடியாது. இச் சரீரம் ஆரோக்யத்துடன் இருப்பதற்காக பற்பல ஆசாரங்கள் கூறப்பட்டன. இவ்வாசாரங்கள் வாழ்க்கையின் பற்பல துறைகளையும், தேவைகளையும் பற்றி ஏற்படுத்தப்பட்ட விதிநிஷேதங்கள் ஆகும். (செய்யவேண்டியவை, கூடா என்ற பாகுபாடுகள்,) இந்த ஆரோக்யம் என்பதுதான் என்ன? சரீரத்திற்கும் மனத்திற்கும் யாதொரு சங்கடங்களும் ஏற்படாது உத்ஸாகமும் பலமும் சுறுசுறுப்பும் பெருகினால் ஆரோக்யம் இருப்பதாகச் சொல்லுவோம். இவைகளில் யாதொன்று குறைந்தாலும் ஆரோக்யம் குறைந்ததாகவேதான் கொள்ளவேண்டும். குறைந்த ஆரோக்யத்தை மீண்டும் பெருக்கிக்கொள்ளவும் ஆசாரங்கள் மிகவும் உதவும்.

ஆசாரங்கள் பல விஷயங்களையும் பற்றி ஏற்பட்டன. ஆகாரம் விஹாரம் (காரியங்கள்) நித்ரை முதலிய பலவும் ஆசாரங்களால்தான் ஆரோக்யத்தைக் காக்கும் வகையில் அமைகின்றன.

ஆரோக்யம் என்றாலே பிணியில்லாத நிலை என்று பொருள்படுவதால் மனப்பிணி, உடல்பிணி இரண்டையும் அகற்றும் கைங்கரியத்தை ஆசாரம் ஏற்கிறது என்றே கூறலாம். ஆரோக்யநிலையைக் காப்பதுஎன்னவென்றால் பிணிவரும் முன் காப்பதுதான் தாத்பர்யமே யொழிய வந்தபின் அகற்றுவதென்பதில்லை. ஆகவே பிணிக்குக் காரணமாகிய மனத்தின் தோஷங்களையும் சரீரத்தில் ஏற்படும் தோஷங்களையும் தலைகாட்டாது தடுப்பதே ஆசாரத்தின் லக்ஷியம்.

இவ்வாறு ஆராய்கையில் மனோதோஷங்களையும் சரீர தோஷங்களையும் தக்க அளவு பெருக்க நம் ஆகாரங்களும், நாம் செய்யும் காரியங்களும் பொருத்த அளவில் காரணங்களாக இருக்கின்றன—என்பது விளங்கும். ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்தால் தனித்தனி சாஸ்திரமாகவே விரியும். ஆனால் கூர்ந்து நோக்கின் நம்முடைய ஆகாரங்களும், காரியங்களும் நம் மனத்திற்கு ஏற்பட்டிருக்கும் காமனை (ஆசை) களை அடைய அவசியமான முறையிலேயே கட்டுப்படுத்தப்படும்; நாமும் அதை உவகையுடன் ஏற்போம் என்பதை மனோதத்துவம் அறிந்தவர்கள் பெரிதும் விவரிப்பார்கள். அவ்வித நிலையில் ஆரோக்யத்தைக் காப்பாற்றவேண்டும் என்றால், நல்வாழ்விற்கு அடிகோலவேண்டுமென்றால் நம் மனத்தை அலைக்கும் முக்கியமான தோஷத்தை ஆராய்ந்து அதை அகற்ற முயலுவதுதான் அறிவுடைமையாகும்.

தற்காலம், ஒவ்வொரு மனிதனுக்கும் தன் வாழ்க்கையின் லக்ஷ்யத்தை என்னவென்று ஆராய்ந்து பூர்த்தி செய்துகொள்ள இன்றியமையாத சாந்தி (அமைதி) கிடைக்கப் பெறவில்லை. தனியொருவன் முயன்றாலும் அவன் அமைதியைக் குலைக்க சமூகமும், அரசாங்கமும், ஏன் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கூட சதி செய்கிறார்களோ என்று எண்ணுமலிருக்கமுடியவில்லை. கட்டுப்பாடு கடமை என்ற பெயரால் ஒவ்வொருவன் மனத்தையும் பெருந் தொல்லைக்கு உள்ளாக்கியிருக்கும் பரிதாப நிலை எவ்வாறு ஏற்பட்டிருக்கக்கூடும்? சுருங்கச்சொல்லில் கீதை ஆசையும் சினமும் என்றது. அது கூட விரிவுதான் என்பேன். ஆசை கூடக் காரணம் இல்லை. பிறரை மிஞ்சவேண்டும் என்ற ஈர்ஷை தான் (பிறர் நலங்கண்டு சகியாது அவரினும் மேன்பாடு அடையவேண்டும் என்ற அவா தூண்ட ஏற்படும் போட்டி மனப்பான்மை) காரணம் எனலாம். இல்லாவிடில் ஒருவரைப்பார்த்து தங்கள் தேவையைப் பெருக்க முயன்று முன்னேறவே முயற்சிப்பதாக பாமரன்முதல் பண்டிதன் வரையில் எல்லோரும் பறைசாற்றுவார்களா! தனக்கு என்னவேண்டிய தவசியம் என்பதைத் தீர்மானித்து அதற்கு முயலுவதை விடுத்து பிறர் பார்த்து முன்னேறிவருகிறோம் என்று புகழ

வேண்டும் என்றே நம் காரியங்களைச் செய்ய விழை வோமா!!

தெள்ளிய மனத்துடன் நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை யின் கோலாஹலத்தைப் பார்த்தால் இந்த தகாத போட்டி மனப் பான்மைதான் எத்துறையிலும் பரவி நிற்கிறது. இது மனித சுபாவம். ஒருவரையொருவர் பார்த்தால் தனக்கில்லாததை பிறரிடம் கண்டதும் தானும் அதைப் பெறவேண்டுமென்ற அவா தோன்றுவது ஸஹஜமே. அதையறிந்தே அப்பொருளையோ, நிலை யையோ பெறும் மார்க்கத்தை தானும் கடைப்பிடிக்கவேண்டும் என்று ஆசைப்படு; அப்பலனே வேண்டுமென்று ஆசைப் படாதே என்று ஆசாரியர் போதித்தார். (हेतावीर्ष्येत् फले न तु) ஒருபடி முன் சென்று நல்வாழ்விற்கு அப்பலன் அவசியமான அளவிற்குத்தான் வேண்டும் என்பதை மனதில் கொண்டு அதை யடைய மார்க்கம் என்னவென்று ஆராய்ந்து கடைப்பிடிப்பதே நல்வாழ்விற்கு அடிகோலியதாகும். அப்பொழுதுதான் போது மென்ற மனமே பொன் செயும் மருந்து என்ற பொன்மொழி யின் தத்துவம் நம் மனதில் தங்கும். அதன் விளைவாக போட்டி மனப்பான்மையை விடுத்து பிறருடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் பலஹீனத்தை உதறித் தள்ளி ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களைத் தேடுவதில் மட்டும் அவரவர்க ளுடைய வாசனையின் அளவிற்கு தனியொருவருக்கோ, ஒரு குடும்பத்திற்கோ ஒரு சமூகத்திற்கோ அல்லது நாட்டிற்கோ அல்லது பொதுவில் லோக க்ஷேமத்திற்கென்றே பாடுபட ஆற்ற லும் அவாவும் மீதோங்கும்.

அவ்வாறு தெளிந்தவர்கள் நாட்டிற்கே நல்வாழ்வை அமைக்க அப்யுதயகேந்திரங்கள் மூலம் உழைக்க முன்வாருங் கள் என்றே கேட்டுக்கொள்ளுகிறேன்.

# KALIA BROTHERS

(REGD.)

MUSK & INDIAN DRUG MERCHANTS,

JULLUNDUR CITY, PUNJAB.

For Pure Musk, Saffron, Shilajit, Gorochanam, Real Pearls, Vamsa lochan, Ashtavargam, Pachakarpuram, Gold & Silver Leaves, Athivisha & All kinds of Himalayan Herbs and Drugs.

*Price list & Catalogue Free on application.*

We were awarded a Gold Medal Certificate for

**MUSK & SAFFRON**

*by 39th All India Ayurvedic Congress,*

KOTTAKKAL, MALABAR.

## கலியா பிரதர்ஸ்

(ரிஜிஸ்டர்டு)

கஸ்தூரி, இந்தியமருந்து சரக்கு வியாபாரிகள்,

ஜலந்தர்ஸிடி, பஞ்சாப். (இந்தியா)

சுத்தமான உயர்ந்த ரககஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜத், கோரோசனம், நல்முத்து, வம்சலோசனம் (மூங்கிலுப்பு), அஷ்டவர்கம், பச்சைக்கர்பூரம், தங்க வெள்ளி இலைகள், அதிவிடயம் மற்றும் நல்ல ஹிமாலய மருந்துச் சரக்குகள் எம்மிடம் கிடைக்கும்.

எங்கள் கஸ்தூரியும் குங்குமப்பூவும்

39-வது அகில இந்திய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தில்

(கோட்டக்கல், மலபார்.)

தங்கமெடல் அத்தாக்ஷிப்பத்திரம் பெற்றவை.

கேட்லாக் விலை விபரத்திற்கு எழுதவும்.

KALIA BROS, *Musk Merchants,*
JULLUNDER CITY. (Punjab.)